Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.167/**2019**

Deposition of PW3 Witness for Defence

Defence Court

Name :Gokulnath Caste:

Father's Name :Balasubramanian Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 09th December 2021.

**முதல் விசாரணை-**

நான் சிவகங்கை மாவட்டம் தேகோட்டை தாலுக்கா வீரபாண்டியபுரம் எண்.14 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். சம்பவ சமயத்தில் டி.எல்.எப் டாஸ்மார்க் பாரில் தற்காலிகமாக வேலை செய்து வந்தேன். அந்த சமயத்தில் என்னுடன் பெரியசாமி, ராஜு, வெற்றிவேல், அஜித், அஜித்குமார் மற்றும் இறந்து போன விவேக் ஆகியோர் வேலை செய்தார்கள். விவேக்கிற்கும் அஜித்குமாருக்கும் 29/05/2019 முடிந்து 30/05/2019 ஆரம்பிக்கும் போது இரவில் பிறந்த நாள். அதனால் கேக் வெட்டினார்கள். பின்னர் எல்லோரும் தண்ணி அடித்தார்கள். அந்த இடத்தில் நான் உட்கார்ந்திருந்தேன். நான் குடிக்கவில்லை. எனக்கு குடிப்பழக்கம் கிடையாது. பின்னர் விவேக்கிற்கும் அஜித்குமாருக்கும் இடையில் போதையில் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் சண்டையை எல்லோரும் விலக்கிவிட்டார்கள். பின்னர் எல்லோரும் சாப்பிடுவதற்கு செல்லவதற்காக தயார் ஆனோம். அஜித்குமார் அறையைவிட்டு வெளியே வந்து படிகட்டு பக்கமாக வந்துவிட்டார். அப்போது விவேக் அஜித்குமாரை

அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார். திடிரென சத்தம் கேட்டது. சென்று பார்த்த போது விவேக் இரத்த காயத்துடன் கிடந்தார். அதற்கு பின்னர் நானும், பெரியசாமி மற்றும் அஜித்குமாரின் தம்பி ஹரிஹரன் ஆகியோரும் சேர்ந்து விவேக்கை ராமசந்திரா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவமனையில் விவேக்கிற்கு முன் தலையில் தையல் போட்டார்கள். குள்கோஸ் ஏற்றினார்கள். காலையில் அழைத்து செல்லுமாறு கூறிவிட்டார்கள். விவேக்கிற்கு வேறு பரிசோதனைகள் எதுவும் செய்யவில்லை. மாத்திரைகள் எழுதி கொடுத்தார்கள். மாத்திரைகளை சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுக்குமாறு கூறினார்கள். பின்னர் விவேக்கை அழைத்து கொண்டு நாங்கள் கடைக்கு வந்துவிட்டோம். இந்த விவரங்களை பெரியசாமி உரிமையாளருக்கு தெரிவித்தார். மாத்திரைகள் விவேக்கை தூங்க வைத்துவிட்டோம். பின்னர் விவேக் மது அருந்தியதாக சொன்னார்கள். ஆனால் நான் பார்க்கவில்லை. பின்னர் இரவில் விவேக் உளரிக்கொண்டிருந்தார். அப்போது சாட்சி ரமேஷ் வந்திருந்தார். அதனால் மீண்டும் ராமசந்திரா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். விவேக் சோர்வாக இருந்ததனால் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு அரசு பொது மருத்துவமனைக்கு போக சொல்லிவிட்டார்கள். ராமசந்திரா மருத்துவமனையில் விவேக்கை அனுமதித்து சிகிச்சை அளிக்கும் அளவில் எங்களிடம் பணம் இல்லை. அதனால் அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்தோம். காலை சுமார் 6.00 மணியளவில் நாங்கள் கடைக்கு வந்துவிட்டோம். இது சம்பந்தமாக ரமேஷ் என்பவர் தான் புகார் கொடுத்தார். அதன் பின்பு போலீசார் டாஸ்மார்க் பாரில் வந்து விசாரித்தார்கள். பின்னர் விவேக் நன்றாக இருப்பதாக சொன்னார்கள். ஆனால் மூன்றாம் தேதி இறந்துவிட்டார். அதனால் மறுபடியும் போலீசார் எங்களை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

30/05/2019 அன்று அதிகாலை 2.00 மணிக்கு ராமசந்திரா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவமனைக்கு உண்டான தொகையை கடையில் இருந்த பணத்தை கொண்டு கட்டினோம். பின்னர் அந்த பணத்தை அஜித்குமாரின் தம்பி ஹரிஹரன் கொடுத்துவிட்டார். அது எவ்வளவு தொகை என்று தெரியவில்லை. தோராயமாக ரூ.3000 அல்லது ரூ.4000 இருக்கலாம். விவேக்கிற்கு எத்தனை தையல் போட்டார்கள் என்று தெரியாது. ஹரிஹரன் பணத்தை பெரியசாமியிடம் திருப்பி கொடுத்தார். மருத்துவமனைக்கு உள்ளே சென்றவிடன் வலது புறமாக உள்ள ஓ.பி யில் வைத்து குள்கோஸ் ஏற்றினார்கள். அப்போது அந்த ஓ.பி க்கு வெளியில் நாங்கள் உட்கார்ந்திருந்தோம். நாங்கள் மூன்று பேர் இருந்தோம். மருத்துவமனைக்கு கட்டணம் கட்டிய போது நான் இருந்தேன். வெளியில் கையேந்தி பவன் கடைகளில் சாப்பிடுவதற்காகத்தான் பணம் எடுக்க சென்றேன். இரவு 12.00 மணிக்கு மேல் நான் தங்கியிருந்த பகுதியில் எந்த கையேந்தி பவன் கடையும் வைப்பதற்கு போலீசார் அனுமதிக்கமாட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விவேக்கை மருத்துவமனையிலிருந்து அழைத்து வந்து அவரை தூங்க வைத்துவிட்டு நான் வேலைக்கு சென்றுவிட்டேன். பிறந்தநாள் கொண்டாடிய இடம் மாடியில் கிடையாது. தரை தளத்தில் தான் இருக்கிறது. மருத்துவமனையிலிருந்த வந்த பின்பு விவேக் மீண்டும் குடித்ததாக சொன்னார்கள். போலீசார் விசாரித்தார்கள். வாக்குமூலத்தில் கையெழுத்து போடவில்லை. கேக் வெட்டிய சமயத்தில் சுமார் 8 அல்லது 9 நபர்கள் இருந்தோம். சம்பவம் நடந்த போது கை வைத்த டீ-சர்ட் போட்டிருந்தார். நான் வந்து பார்த்த போது விவேக்கின் மீது இரத்தம் இருந்தது. கடையில் வேலை பார்ப்பவர்கள் தான் விவேக்கின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தார்கள். எத்தனை மணிக்கு ராஜீவ் காந்தி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்று

தெரியவில்லை. 30/05/2019 அன்று இரவு தான் ராமசந்திரா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். நேரம் தெரியவில்லை. 30/05/2019 அன்று அதிகாலையில் ராமசந்திரா மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில் விவேக்கை அழைத்து சென்றோம் என்று நினைவில்லை. மருத்துவர் கொடுத்த மருந்த மாத்திரைகளை விவேக் சரியாக சாப்பிட்டாரா என்பதை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் ஒரு மாதமாக தான் அங்கு வேலை பார்த்தேன். அதனால் இறந்து போன விவேக்கை எனக்கு அவ்வளவாக தெரியாது. இறந்து போன விவேக்கிற்கு ஏற்கெனவே உடல் உபாதை இருந்ததாக கேள்விப்பட்டேன் நேரடியாக தெரியாது. விவேக் சாட்சி ரமேஷ் உடன் சேர்ந்து குடித்தாரா என்பதை நான் பார்க்கவில்லை. அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது விலாசம் மட்டும் கேட்டார்கள். அதை எழுதி கொடுத்தோம். அரசு பொது மருத்துவமனைக்கு சென்ற போது விவேக் தலையில் கட்டு போட்டிருந்தார். ஏற்கெனவே அடிபட்டு சிகிச்சை அளித்த விவரங்களை நாங்கள் கூறவில்லை. அரசு பொரு மருத்துவமனைக்கு சென்ற போது நானும் பெரியசாமி மற்றும் ரமேஷ் ஆகியோரும் உடன் இருந்தோம். அரசு மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்னர் ராமசந்திரா மருத்துவமனையில் சுமார் ஒரு மணி நேரம் இருந்தோம். அப்போது விவேக் என்னிடம் பேசவில்லை. விவேக் சுயநினைவில்லாமல் இருந்தார். மருத்துவமனையில் படுக்கையில் தான் இருந்தார். ராமசந்திரா மருத்துவமனையில் நோயளியுடன் ஒரு நபர் தான் இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதனால் நான் வெளியில் வந்துவிட்டேன். பெரியசாமி தான் உள்ளே இருந்தார். ராமசந்திரா மருத்துவமனையிலிருந்து அரசு மருத்துவமனைக்கு செல்லும் போது நானும் உடன் சென்றேன். ஏன் ராமசந்திரா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கவில்லை என்று பெரியசாமியிடம் கேட்டபோது பணம் இல்லை என்று கூறினார். 30/05/2019 அன்று காலையில் விவேக்கை மருத்துவமனையிலிருந்து அழைத்துவந்த பின்பு நான் வேலைக்கு சென்றுவிட்டதால் அவரை கவனிக்கவில்லை. போலீசார் விசாரித்த போது எனக்கு குடி பழக்கம் இல்லை

என்று தெரிவித்தேன். யாருடைய துாண்டுதலின் பேரில் இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் எவ்வாறு விசாரிப்பார்கள் என்ற விவரங்களை எனக்கு யாரும் சொல்லவில்லை. எங்களுடைய அறையிலிருந்து ராமசந்திரா மருத்துவமனைக்கு செல்ல எவ்வளவு நேரம் ஆனது என்று நினைவில்லை.